<u>சுருக்கம்</u>

பொது விநியோகத் திட்டம் – மண்ணெண்ணெய் – புதிதாக வழங்கப்பட்டுள்ள தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 2009–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு மட்டும் தலா மூன்று லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி2) துறை**

**அரசு ஆணை(டி) எண்: 23** **நாள்: 23–1–2009**

**படிக்கவும் :**

1)அரசு ஆணை(டி) எண்.430, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 31–12–2008.

2) உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடிதம் எண்.ஒ2/48800/2008 நாள் 19–1–2009.

----

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், புதிதாக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களில் ஒரு சிலிண்டர் இணைப்பு மட்டும் உள்ளவர்கள் மற்றும் சிலிண்டர் இணைப்பே இல்லாதவர்களுக்கு 2009–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு ஏற்கனவே அரசு நிர்ணயித்துள்ள வழக்கமான விநியோக அளவுடன் கூடுதலாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை அதாவது தலா 3 லிட்டர் வீதம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

2. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் தனது கடிதத்தில், மைய அரசு நடப்பு காலாண்டிற்கு (ஜனவரி–மார்ச் 2009) 139733 மெட்ரிக் டன் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது எனவும், புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு 2009–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு மட்டும் தலா மூன்று லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கிட ஏற்கனவே அரசாணை (டி) எண்.430, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 31–12–2008–ல் ஆணையிட்டுள்ளது என்றும், 2009–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வாலாய ஒதுக்கீடு வழங்கியதுபோக, தற்போது 6052 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் கையிருப்பு உள்ளதாகவும், இந்நிலையில் ஒரு சிலிண்டர் எரிவாயு இணைப்பு மட்டும் உள்ள மற்றும் சிலிண்டர் இணைப்பே இல்லாத, தகுதியுள்ள புதிய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 2009–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மட்டும் தலா மூன்று லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கிட தக்க அரசு ஆணை பெற்றுத் தருமாறு ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரின் பிரேரணையை ஏற்று, ஒரு சிலிண்டர் இணைப்பு மட்டும் உள்ள மற்றும் சிலிண்டர் இணைப்பே இல்லாத தகுதியுள்ள புதிதாக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 2009–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு தலா மூன்று லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்க ஏற்கனவே ஆணையிட்டுள்ளதை போன்று, 2009–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கும் தலா மூன்று லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கிடலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. இதுதொடர்பாக உடன் மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மற்றும் இதுகுறித்து போதிய விளம்பரங்கள் செய்ய தக்க மேல்நடவடிக்கை எடுக்குமாறும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**(க.சண்முகம்)**
**அரசு செயலாளர்.**